1996 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் தேங்காய்ப் பூ தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வெங்கடேசன் இருக்கையில் இல்லை. திரு. ஜி. எல். வெங்கடாசலம்.

திரு. ஜி. எல். வெங்கடாசலம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம், பாலக்கோடு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் தென்னை உற்பத்தி ஆகிறபடியால், அங்கே விவசாயிகளின் நலன் கருதி அடுத்த ஆண்டிலாவது இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அரசு இதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேங்காயைவிட மாம்பழம்தான் அதிகமாக தர்மபுரி மாவட்டத்தில் உற்பத்தியாகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 211, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

211—

CONSTRUCTION OF KELAVARAPALLI ANAICUT

*** 67–Thiru B. VENKATASAMY:**

Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) What is the stage of construction of Kelavarapalli Anaicut, which was started ten years ago; and

(b) the steps taken to increase the storage capacity in that anaicut?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1-11-1977-ல் பணி ஆரம்பிக்கப்பட்டு 30.6.1995-ல் பணிமுடிக்கப்பட்டு நிரந்தர கோட்டத்திற்கு பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டது. இப்பணிக்கு தேவையான இனாம் நில ஆர்ஜிதம் குறித்து உச்சநீதி மன்றத்திலும், சென்னை உயர்நீதி மன்றத்திலும் மற்றும் ஒசூர் மாவட்ட முன்சீப் கோட்டில் ஒரு வழக்கும் நிலுவையில் உள்ளது. இந்த வழக்குகளால் அணையில் நீர்தேக்குவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையினால் வெளிப்போக்கு சுவற்றின் அளவுவரை மட்டுமே தண்ணீர் தேக்க இயலுகிறது. இருக்கும் தண்ணீர் சிப்காட் நிறுவனத்திற்கும் ஒசூர் நகரியத்திற்கும் குடி தண்ணீருக்காக பயன்பட்டு வருகிறது. இந்த வழக்குகள் முடிவுற்றபின்தான் பாசனத்திற்கு தண்ணீர் தேக்க இயலும்.

முற்பகல் 9-50.

Thiru B. VENKATASAMY: Hon. Deputy Speaker Sir, the Government has invested nearly Rs. 16.5 crores for the construction of the anaicut and 12500 acres are to be irrigated by that anaicut. The entire money has been invested and the entire project of construction of anaicut is completely over. So, may I know from the Hon. Minister for Public Works whether he would see that an ordinance is promulgated and the catchment area which is under dispute is acquired so that the entire 12500 acres may be irrigated and drinking water to SIPCOT complex and Hosur Town may be supplied and the drinking water problem solved? Because of this problem, all industrialists want to go out of Hosur as there is no water. In view of the above, may I know from the Hon. Minister and the Hon. Chief Minister whether they would see that an ordinance is promulgated and the land under dispute acquired?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளவரப்பள்ளி அணைக்கட்டு பிரச்சினை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உயிர்நாடியான பிரச்சினை. அந்த அணைக்கட்டு, ஒரு பரிதாபகரமான அணைக்கட்டு. இந்த அணைக்கட்டு 1977-ஆம் ஆண்டு கட்டத் துவங்கப்பட்டது. இந்த அணைக்கு, ரெவின்யூ லேண்டு 585 ஏக்கரும், இனாம் நிலம் 474 ஏக்கரும் தேவைப்பட்டது. இந்த 474 ஏக்கர் இனாம் நிலத்தை எடுத்துக் கொள்கின்றபோது, 4(1) நோட்டிபிகேஷன் கொடுத்த பிறகு, அணையைக் கட்டத் துவங்கியிருக்கலாம். ஆனால் 4(1) நோட்டிபிகேஷன் கொடுக்காமல், இவர்களாகப் போய் அணையைக் கட்டத்

1996 ஆகஸ்ட் 22]

துவங்கிவிட்டார்கள். அவ்வாறு அணையைக் கட்டத் தொடங்கி, ரூ. 2 கோடியே 70 இலட்சத்தைச்டி செலவு செய்துவிட்டார்கள். இந்த நிலையில், 1979-இல் நிலச் சொந்தக்காரர்கள் ஒரு வழக்குப் போட்டார்கள். “4(1) நோட்டிபிகேஷனும் கொடுக்கவில்லை; எங்களிடம் பெர்மிஷன் கேட்காமல், எங்களுடைய நிலத்திலே ரூ. 2 கோடியே 70 இலட்சம் செலவு செய்து அணையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்; இது தப்பு” என்று சொல்லி அவர்கள் வழக்குப் போட்டார்கள். இதனால் அணையைக் கட்டும் வேலை நின்றுபோய்விட்டது. 1979-லிருந்து 1987 வரை, 8 ஆண்டு காலம் அணை கட்டப்படாமல், வேலை நின்றுபோய் விட்டது. பிறகு 1987 இறுதியில் ஒரு ஸ்பெஷல் ஆர்டினன்ஸ் போட்டு, அணையை கட்டுகின்ற அளவிற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. இந்த 474 ஏக்கர் நிலத்தில் 108 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் ஸ்பெஷல் ஆர்டினன்ஸ் போட்டு, அணையைக் கட்ட ஆரம்பித்தார்கள். அந்தப் பணி 1995 வரையில் நடைபெற்றது. இதிலே 8 ஆண்டு காலம் போய்விட்டது. இதிலே இருக்கக் கூடிய பிரச்சினை என்னவென்றால், 108 ஏக்கர் நிலத்திற்கு ஸ்பெஷல் ஆர்டினன்ஸ் போட்ட பொழுதே, தண்ணீரைத் தேக்குகின்ற, ‘வாட்டர் இம்பவுண்ட்’ பண்ணுகின்ற அந்த 366 ஏக்கர் நிலத்திற்கும் ஒரு ஸ்பெஷல் ஆர்டினன்ஸ் போட்டிருக்கலாம். ஆனால் என்னவோ போடவில்லை. பிறகு, அந்த நிலச்சொந்தக்காரர்கள் என்ன செய்தார்களென்றால், அந்த ஸ்பெஷல் ஆர்டினன்ஸ்-சை எதிர்த்து வழக்குப் போட்டார்கள். வழக்கு உச்சநீதிமன்றத்திலே விசாரணையில் இருக்கிறது. இதற்கிடையில் அணையும் கட்டி முடித்தாகி விட்டது. இப்பொழுது தண்ணீரைத் தேக்க வேண்டும். தண்ணீரைத் தேக்கப் போகும்போது, “தண்ணீரை நீங்கள் தேக்கக் கூடாது” என்று அவர்கள் ஒரு வழக்கு போட்டார்கள். இந்த வழக்கை எப்பொழுது போட்டார்களென்றால், 1990-லே போட்டார்கள். 1990-லே வழக்குப் போட்டு, இப்பொழுது 6 ஆண்டு காலம் ஆகிவிட்டது. ஆனால் இதுவரையிலும் அரசு தரப்பில் ‘கவுண்ட்டர்’ கூடப் போடப்படாமல் இருக்கின்றது. சென்ற மாதம் நான் வேறொரு நிகழ்ச்சிக்காக ஒசூர் சென்ற போது, அந்தப் பகுதியிலே அணை இருக்கிறதா என்று கேட்டு, உறுப்பினரையும் அழைத்துக் கொண்டு போய் கேட்டதற்குப் பிறகு, ‘கவுண்ட்டர்’ கூடப் போடாமல் இருப்பது தெரிய வந்தது. ஒரு வழக்கு போடப்பட்டு 5 ஆண்டு காலம் ஆகியும் ஒரு ‘கவுண்ட்டர்’ கூட போடப்படாமல், கடந்த கால ஆட்சி நடைபெற்றிருக்கிறது. எனவே, கலைஞர் அவர்கள் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 17-6-1996 அன்று “ ஏன் ‘கவுண்ட்டர்’ போடப்படாமல் இருந்திருக்கிறது” என்று கேட்டபிறகு, “இப்பொழுதுதான் சப்-கலெக்டர்

ஓசூரில் இருப்பவர்களிடம் கேட்டிருக்கிறார்கள்; கவுண்டர் போடுவதற்கு என்ன 'பாயிண்ட்ஸ்' இருக்கின்றன எனக் கேட்டிருக்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். ஆக மொத்தம் 19 வருட காலத்தில், கிட்டத்தட்ட 18 ஆண்டு காலம் இந்தப் பிரச்சினையிலேயே போயிருக்கிறது. ரூ. 5.75 கோடி மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், இப்போது, கிட்டத்தட்ட ரூ. 22 கோடிக்கு மேல் போய்ச் சேரும் நிலை உள்ளது. ஆகையினால், எப்படியாவது 'கவுண்டர்'-ஐ போட்டுவிட்டு, தண்ணீரைத் தேக்கிவிட வேண்டுமென்று இந்த அரசு உறுதி அளித்திருக்கிறது. இதுவரையில் மூன்று 'ரெவியூ மீட்டிங்' நடத்தியிருக்கிறோம். நேற்றைக்குக் கூட ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. ஆகையினால், விரைவில் தண்ணீரைத் தேக்குவதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 212. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. பெ. சாமிநாதன், திரு. நா. பெரிய சாமி, திரு. வி. கே. லட்சுமணன் மற்றும் திரு. எஸ். எஸ். பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

212—

பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம்

***2009-திரு எம். பி. சாமிநாதன்**

திரு. நா. பெரியசாமி

திரு. வி. கே. லட்சுமணன்

திரு. எஸ். எஸ். பொன்முடி

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம் உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS